<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.
2024–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் நாள் திங்கள்கிழமை.

<u>இடைநிலை மனு எண்.1/2022</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண்.481/2019</u>

சுப்ரமணியன் .....மனுதாரர் / வாதி

/எதிர் /

தங்கவேல் (இறந்தவர்) ..... பிரதிவாதி

1. கனகமணி
2. மகேஸ்வரி
3. ஆறுமுகம்
4. செந்தில் வடிவு
5. ராஜகுமாரி (இறந்தவர்) ..... 1 முதல் 5 எதிர்மனுதார்கள் / இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுதாரர்கள்

இம்மனு 10.04.2024–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. வாசுதேவன் அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 4ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தால் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றதரப்பினராக்கப்பட்டும், 1 முதல் 3 எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது 15.04.2018–ல் இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள 1386 நாட்கள் காலதாமத்தை மன்னிக்க வேண்டி காலவரையறை சட்டம் பிரிவு 5–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர்/வாதி பிரதிவாதி பெயரில் தாவா சொத்து பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு நிலுவையில் உள்ளபோது தனது

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.04.15 19:10:40 +0530

தந்தை பிரதிவாதி தங்கவேல் என்பவர் 15–04–2018–ல் இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன தங்கவேலுவிற்கு, மகன் சுப்ரமணியன் (வாதி)–1, மகள்கள் கனகமணி–2, மகேஸ்வரி–3, மகன் ஆறுமுகம்–4, மகள் செந்தில்வடிவு–5, மகள் ராஜகுமாரி–6 (24–06–2022–ல் இறந்துவிட்டார் ). ராஜகுமாரி இறப்பதற்கு முன்பாகவே அவரது கணவர் இறந்துவிட்டார் என்றும், அவர்களுக்கு வாரிசுகள் ஏதுமில்லை என்றும், மேற்படி நபர்கள் இறந்துபோன தங்கவேல் என்பவரின் வாரிசுகள் என்றும், எனவே 2 முதல் 6 எதிர்மனுதார்களை இந்த வழக்கில் இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்வதில் 1386 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், கொரானா பெரும் தொற்று மற்றும் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் 15–04–2018–ல் இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை இந்த வழக்கில், சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள 1386 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 4 ம் எதிர்மனுதாரர் போதிய கால அவகாசம் அளித்தும் நீதிமன்றத்திற்கு அழைத்தும் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

6. தீர்வு

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கட்டினை பரிசீலித்த வகையில் மனுதாரர்/வாதி, இறந்துபோன பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்து பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் 15.04.2018 ம் தேதி அசல் வழக்கின் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், கொரானா பெரும் தொற்று மற்றும் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் 15.04.2018–ல் இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளை இந்த வழக்கில், சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள 1386 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து அனுமதிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளதை ஆராய்கையில், இம்மனு காலதாமதத்தை மன்னிக்க கோரி மட்டுமே தாக்கல்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.04.15 19:10:49 +0530

செய்துள்ளதாலும், மனுதாரர் காலதாமதத்திற்கான காரணமாக கூறியுள்ள கொரோனா பெருந்தொற்று காலம் என்பதை பகுதியளவு ஏற்கத்தக்கது என்றாலும் மனுதாரர்/ வாதிக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கு அத்தாட்சியாக மருத்துவ ஆவணங்கள் எதையும் மனுதாரர் மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை அந்தவகையில் மனுவில் கூறியுள்ள மேற்படி காரணம் முழுவதும் ஏற்கத்தக்கதல்ல என்று கருதபட்டாலும் அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/ வாதியால் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால், இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகளான எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தால் மட்டுமே அசல் வழக்கை முழுவதுமாக தீர்மானிக்கப்படமுடியும் என்ற நிலையிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை ஏதும் தாக்கல் செய்யாமல் தோன்றாதரப்பினர்களாக ஆகியுள்ள நிலையிலும் மனுவை அனுமதிப்பது நீதி நலனுக்கு உகந்தது என்று கருதியும், இருப்பினும் 1386 நாட்கள் என்பது மிக அதிக காலம் என்பதும், அந்த வகையில் கால தாமதத்தினை பொருத்து கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்பட்டும் எந்த ஒரு நிபந்தனைகளையாவது மனுதாரர் மீறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக உத்தரவிடப்படுகிறது.

மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

1. மனுதாரர் எதிர்வரும் 03.06.2024 ம் தேதிக்குள் ரூ.500/-ஐ பெரம்பலூர் மாவட்ட சமரசதீர்வு மையத்திற்கு செலுத்தி அதற்குண்டான இரசீதினை இந்நீதிமன்றத்தில் 03.06.2024 ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

2. மனுதாரர் அசல் வழக்கினை காலம் தாழ்த்தாமல் தேவையற்ற வாய்தா பெறாமலும் வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.04.15 19:10:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P
PARVADHRAJ
ARUMUGAM

DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P
PARVADHRAJ
ARUMUGAM
Location:
VEPPANTHATTAI
Date: 2024.04.15
19:11:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.